

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
12 JUL 1927

அருப்புக்கோட்டை என்று பேர் வழங்கும்
திருநல்லூர்,

ஸ்ரீ வாழவந்தம்மன்

தோத்திரக் கும்மிச்சிந்து.

திருப்பதி, ஸ்ரீ வெங்கடேஸ்பரர் பக்தர்களாகிய
வே. சுப்பையாத் தாசிரி,
மு. சு. மாயக்கருப்பத்தாசன்
இவர்களால் பாடப்பெற்றது.

அருப்புக்கோட்டை,
ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.
1927.
இதன் விலை அணா 1.

உ

கடவுள் துணை.

திருநல்லூர் என்ற அருப்புக்கோட்டை,

வாழவந்தம்மாள் பேரில்

கும்மிப் பாட்டு.

Q25:417
N27
2469
894.811
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 JUL 1927
MADRAS

விநாயகர் துதி.

சத்தி உமையாளுடைய தன்னுடைய புத்திரனைப்
எத்திசைக்கும் நல்லவனைப் எனக்குமே னுள்ளவனைப்
பத்தி செலுத்துகின்ற பத்தர்களுக்கு உத்தமனைப்
முந்திக்கு உத்தி தரும் விநாயகனே காப்பாயே.

சிவபெருமான் துதி.

நீதியாய் எங்கும் நிறைந்த பரிபூரணியாளே
ஆதிநல்லூர் வாழவந்தாள் அம்பிகைமேல் பாடல்தனை
ஓதியுணர்வோரையும் உற்றிருந்து கேட்போரையும்
பாதிமதியணிந்த பரமனே காத்திடாயே.

மகாவிஷ்ணு துதி.

பூதலம் நிறைந்த கோமா புவிதனையளந்த மாயா
நாதனே மூர்த்தி ரெங்கநாவினால் விண்ணோர் போற்ற
சீதாமுகுந்த ராமதிருப்பதி மலையில்வாழும்
மாதவா வெங்கடேசா வந்தென்னை ரட்சிப்பாயே.

மகா-ள-ள-ஸ்ரீ வே. சுப்பையத் தாசரி இயற்றிய

ஆசிரிய விருத்தம்.

பொல்லாத வேளையோ செல்லாத காலமோ
பூர்வம் நான் செய்த வினையோ
புவிதனில் ஏழையாய்ப் பிறந்துமே நானொரு
புண்ணியமும் செய்தறியேன்
நல்லோர்கள் தன்னையும் பொல்லாங்கு பேசியே
நான் கெர்வங் கொண்ட வினையோ
காரணா உன்னடி போற்றிப் பணிவோர்க்கு
நானடிமை செய்தறியேன்.

223643

வல்லவா மாயனை மகிமையா னறியாமல்
　　　மையலதா மிகவும் கொண்டு
மங்கையர்கள் மோகவலையில் சிக்கியான்
　　　வாழ்நாளைப் போக்கினேனே
கல்லைப் பெண்ணாக்கிய நல்லவா உன்னுடைய
　　　கருணைக் குரித்தாவனோ
கார்வண்ணனே திருவெங்கிடாசலபதிக்
　　　கண்ணனே எனையாளுவாய்.

ஆழிலேமுதலையும் ஆனையைத்தாஞ்சிட
　　　அரியென்ற வோசை கேட்டு
அந்நேரம் வந்து நீ தும்பியை ரட்சித்து
　　　ஆள்வாழியளிந்த வில்லைபா
பாழிலேமாய்ந்து விழ ராவணன் தம்பியை
　　　பார்த்தமனம் எங்கேயோதான்
பாரினிலடியேனைப் பாராதிருந்தாக்கால்
　　　பாலன்நானென்ன செய்வேன்.

காளிங்கா நர்த்தனம் செய்து திருவனத்தினில்
　　　கன்றுகளை மேய்த்த அலுப்பா
காட்டினில் மோகினியாகிய பஸ்பனைக்
　　　காய்ந்ததொரு மனதுகளிப்பாய்
ஆழாளி தன்னிலே ஆலிலைமேல்த் துயில்கின்ற
　　　அலுப்பா வெகு சலுப்பா
ஆண்டருள் திருப்பதி நீண்டபுகழ் பூபதி
　　　அரிவெங்கிடாசல பதியே.

வாழவந்தம்மாள் பேரில் கும்மிப்பாடல்.

சத்திகடாதரி வாழவந்தாளம்மா
ளுத்தமிமேல் கும்மிப்பாட்டுரைக்க
வித்தைக்குதவிய ஒத்தக்கொம்பனுதி
சித்திவிநாயகன் காப்பாமே.

எத்திசையும் புகழ் பெற்றவராம் அந்தச்
சுப்பிரமண்யக் கடவுள் உற்றவராம்
பத்தினிமேற்கும்மி பாட்டுரைக்க அவர்
புத்திரளுள்வாராம் மாதாசே.

223643

நித்தியகல்யாணி வாழவந்தாளம்மாள்
சத்தியின்மேல் கும்மிப் பாட்டுரைக்க
சத்தியவேதமும் நித்திய மோதிடும்
சரஸ்வதிபொற்பதம் காப்பாமே.

சீறியரவமாம் பஞ்சணை மீதினில்
பாரினில் பள்ளிகொண்டேயிருக்கும்
காரணன் பாதத்தைப் போற்றிப் பணிந்திட
வாரணிகிருபை செய் தாரணியில்.

பாரினில் பரதகண்டமதில் இந்தப்
பாவலர் சூழ்திரு நல்லூர்வாழ்
காரணி பூரணி வாழவந்தாளம்மாள்
நாயகியுன்பாதம் போற்றியம்மா.

சேதுபதிமகராஜன் முன்னாள் அவர்
செய்த தவத்தாலே நல்லூராய்
பாதிமதியையணிந்த கடவுள்
பரமனருள் செய்தார் மாதரசே.

இந்த வளத்தின் மகிமை தனைச் செப்ப
விந்தைநகீசர் சேடனால் கூடாதென்று
சொந்த வளந்திரு வாழவந்தாளம்மாள் சொல்லச்
சொன்னதொன்னை லானமட்டும்

வேத முணர்ந்த பெரியோர்கள் மற்ற
மேதினியில் அவர் பாலனுக்கும்
வதுநதெரியாத ஏழைநான் சொல்வதை
எல்லோருங்கண்டு பிழை பொறுப்பீர்

சொந்த அடிமையாம் மாயக் கருப்பனை
சொன்னமட்டும் கவி போதுமென்றாள்
எந்தவிதத்தில் யான் சொல்வேனம்மா—எந்தன்
ஈஸ்வரி உந்தனருள்வேணும்

வானவர்வந்து மகிழ்ந்து விளையாடும்
மந்தியுலாவிய தோப்புதனில்
தானவராகவே எங்களும் எந்தன்
சுவாமியிருப்பதைப் பாருங்களேன்

வாசமலர்களெல்லாம் கூடி இந்தத்
தேசங்களெங்கும் மணர்வ தொக்கும்
ஓசையிலே மணிகட்டிக் குருசாமி
உத்தம சித்தர்தாம் என்குரு

மன்னன் மணிகட்டிச் சுவாமி குருநாதன்
வையகத்தில் இதைச் சீஷனை
என்ன விதத்துக்காள் கொண்டாரோ அதை
ஈசனறிவாரே தோழிகளே

வேதமுலாவிய சாலைகளும் அந்த
வாவியில் கூவிய நாதங்களும்
மாதருலாவிய சோலைகளும் அந்த
மாமறையோர் சூழும் சாலைகளும்

காதல்தவிர்த்த தபோதனரிருக்குங்
கடையும் செண்பகச் சோலைகளும்
ஓதுதலில்லாத நேரமதில் அந்த
ஒளியைப் பார்க்கிற மேதாவும்

செல்வம்பெருகிச் செழித்து வளர்ந்திடும்
சீமானிருக்கிற வீதிகளும்
அள்ளிச்சொரியும் தரும விதைகளை
ஆய்ந்தோர் வாழ்கிற வீதிகளும்

கள்ளத்தனங்களை அள்ளிக் கொடுத்திட்ட
காரண பூரண வீதிகளும்
வெள்ளைக்கடலில் புகுந்து முழுகிடும்
தெள்ளியர் வாழ்கிற வீதிகளும்

அள்ளிப்பொசிக்கும் சதானந்த மேடையும்
அன்பர் வாழ்கிற காவுகளும்
வெள்ளியங்கிரிக்குச் சாலாகத் தோணும்
வேந்தர்கள் வாழ்கிற வீதிகளும்

வந்து சிறுமாதர் கூந்தலுலர்த்திப்பூச்
செண்டுமுடிகிற மேடைகளும்
எந்தவிதமென்று சொல்லலாமோ அந்த
மைந்தர் விளையாடும் பந்துகளும்

என்னைப்போல் ஏழை எங்கேயிருந்தாலும்
இங்குவாவென்று அருள்புரிந்து
அன்னை தந்தைபோல் பார்த்து வருகின்ற
ஆய்ந்த பெரியோர் வீதிகளும்

என்னவிதமென்று சொல்லலாமோ அந்த
முன்னவன்செய்த மொழிவிதியை
அன்னவன் வந்துதான் சொன்னாலுந்தானும்
அம்பிகைமேல் வேறு சொல்லுகிறேன்

மாதம் மும்மாரி பொழிந்து விளைகின்ற
மாநகராந் திரு நல்லூர்வாழ்
நாதம் இலங்கிட வேதம் முழங்கிட
நாயகியே நீ தான்வருவாய்

பத்தர்மகிழ்ந்து பாவிப்பணிந்திடும்
பாண்டியனார் தன்மகளே
பாரினில் பாவலர் ஓதிமகிழ்ந்திடும்
பாக்கிய வாட்டியே நீ

சித்தர்படைகளும் சூழ்ந்திருக்க அந்தத்
தேவமாதர்களும் வாழ்ந்திருக்க
எத்திசையோர்களும் போற்றி நிற்க எந்தன்
ஈஸ்பரி அம்மணி நீ வருவாய்

அன்னையே உந்தனையல்லா லுலகினில்
ஆருண்டும் சொல்லம்மா எந்தனுக்கு
கன்னலமுதோகனிரசமோ சீனி
கற்கண்டோவுந்தன் கழலழகு

என்னவிதம்மா இனிக்குதம்மா இனி
நந்தவனம வளஞ் சொல்லுகிறேன
மேகமுலாவிய சோலைகளும் அதில்
தாவியுலாவிய யானைகளும்

வாவியில் கூவிய தோகைமயில்களும்
ஏசமாக விளையாடுவதும்
வண்டுகள்கொண்டாரம் பாடுவதும் அதைக்
கண்டு பெரியோர் கொண்டாடுவதும்

Q22:417
N27
223643

அண்டர் அமரர்கள் சூழுவதும் அதில்
அண்டரெண்டபட்சி வாழுவதும்
கண்டுதபோதனர் சூழுவதும் அந்தக்
காட்சியைப் பாரடி தோழியரே

வைகாசிமாதந் திருவிழாவில் அந்த
மாலயநுந் தேடியும் காணாத
மெய்யன் அதில்வந்து வீற்றிருப்பார் அந்த
விந்தையைச் சொல்லவுங் கூடுமோதான்

அந்தியுஞ் சந்தியும் தேவகணங்களும்
வந்துமலர்களிடுப்பதுவும்
சந்திரசேகரன் சுந்தரமுடிமேல்
வந்துபொழிவதைப் பாருங்களே

காலனணுகாத காரணராம் இந்தப்
பாரினுள்ளோர் பசி தீர்த்தவராம்
ஆலகாலவிஷமுண்டவராம் அந்த
அம்பிகைபாகமமர்ந்தவராம்

வாழவே நல்லூரை வைத்தவராம் அதில்
வாழ்வோர்க்கமிர்த மளித்தவராம்
ஆலயம சாலையும் நந்தவனங்களும்
அற்புதம்பாரடி தோழியரே

மாவும் பிலாவும் கொய்யாவுமே வேகமாய்
பாக மகிழ்ந்திருப்பதும்
தாவியமந்திகள ஏகமாய்க் கூடியே
பாகமதாக விருப்பதுவும்

காலைகமுகோடுவாழை அயிலோடு
காவுகள் எங்குமே சூழ்ந்திருக்க
தாழையடி யோனும் வீற்றிருக்கும் அந்த
சம்புகத்தோப்படி தோழியரே

செண்பகம் பிச்சி இருவாட்சி முல்லை
சேர்ந்தமருக்கொழுந் தொருவாச்சி
அன்பர்மகிழ்ந்து மலர்களெடுப்பதும்
நண்பன்மலரடி போற்றுவதும்

இந்தச் சிங்காரவனமதில் பக்தர்கள்
பொங்கியமுதளிப்பதுவும்
சந்தோஷமாகவே ஏனுகிநாயனுர்
வந்துமகிழ்ந்து இருப்பதுவும்

அன்னக்கொடிகள் பறப்பதுவும்—அந்த
வர்ணப்பேடை சோடு கூடுவதும்
இன்னும் பலவிதமாக விருப்பதை
என்னென்று சொல்லுவேன் தோழியரே

பொன்னுலாவு செங்கீகுளம்—என்ற மெட்டு

சீர்வளந்திருநல்லூர்ப்பேர்வளம் அருப்புக்கோட்டை
செல்விமுத்துவாழவந்தாள் நாயகி அடியேன்
கல்விதனில் விற்றிருக்கும் தாயே நீ—இந்த
ஜெகமதனிலேபுகழ்பெருகிட அகமகிழ்ந்து நீ இகமதனில்வர
தேவியுமை நாயகியே உந்தன்—பாதம்
மேவினோர்க்கருள் புரிவாய் வந்து

கன்னல்பூங்கதலிவளம் செந்நெல்வினை நல்லூர் வாழும்
காரணி மனோமணி நீ பூரணி—ஜெக
வாரணி கிருபைசெய்வாய் பாரினில்—கலி
காலமதனிலே பாலனென துட வாலவயதில் ஓதியருளிய
கங்கையும் சடையுமானவா—அடியோருடை
பங்கில் வந்தருள்புரியவா.

அல்லிலும் பகலிலும் இல்லிலும் அடியேனுடைசொல்லிலும்
அமர்ந்திருக்கும் தாயே நீ —அன்பர்
வல்வினை தவித்தருள்வா நீயெனில்—இப்போ
ஆண்டருள் செய்தாண்டவிநீ நீண்ட ஆயுளில்வேண்டுகோளி
அம்பிகைமனோமணியே தாயே—உன்னை [னும்
நம்பினோர்க்கருள்புரிவாய் நீயே.

சண்டனைக்கலாவதைத்தத் தொண்டர்களுக்கருள்புரிந்த
சங்கரன் மகிழவந்ததாயே—அன்பர்
பங்கில்வந்தருள் புரிவாய்நீயே—அந்தச்
சகடசூரனை மகுடம்விழநீ அகடவாதினில் இகடவேசெய்த
சாம்பவிசாமுண்டியே நீ தாயே—இந்தப்
பாண்டியநாட்டில் வருவாயே.

அன்னை தன் வயிற்றினிலே முன்னேபட்ட பாடுபோதும்
ஆதிபரமேஸ்வரியே அம்மா — உந்தன்
பாதமதில் வைத்திடுவாய் சும்மா — அந்த
ஆதிமூலமும் வேதநாதனும் அடியோடியுந் தேடியுங்காணு
அம்பிகை பராபரியே தாயே — என்னை
அம்புவியில் காத்தருள்வாய் நீயே.

அங்கயற் கண்ணம்மையாகி எங்குமாய் நிறைந்தஜோதி
ஆதிநல்லூர் வாழவந்தவா — அரனுடலில்
பாதியாகப் பாகங்கொண்டவா —
ஆதியாகியே ஜோதியாகி நீதியாகியே வேதமோது நீ
அகிலமும்புகழும் அன்னையே — உனதுடைய
மகிமையுக் தெரியவில்லையே.

சங்கையற்ற அன்பருடன் பக்தருற்றருள்புரியும்
தாரணியளந்தமாயவன் — அரிகிருஷ்ணன்
பாரினிலுடன் பிறந்தவள் — அந்த
தாசருங்காய் பாசம்வீசிடும் மோசகாலனை நாசஞ்செய்திடும்
சங்கரன்புகழும் அன்னையே — அநுதினமும்
நம்பினேனுன்னையாள் அன்னையே.

கன்றெறிந்தமாயன் தங்கை என்று உன்னை நம்பிவந்தேன்
காசினியெல்லாமளித்தவா — அடியேனை
காத்துநீயருள் புரியவா — அந்த
கங்கையோடரைதிங்கள் சூடிடும் சங்கரன்புகழ் தங்கமேயுனைக்
கண்டுபோற்ற ஆவல்கொண்டேனே — அநுதினமும்
தொண்டுசெய்யவந்துகொண்டேனே.

சக்ரவர்த்தி தவத்துதித்து திக்குகளெல்லாஞ்ஜெயித்து
சங்கரனைக்கண்டு நாணியே — நம்முடைய
சாமியென்று அங்கு நாடியே
தாயே உந்தனைமேவி வந்திதனை நாயேனெந்தனையாதரித்திடும்
சர்வலோக நாயகியே அம்மா — பாதம்
தஞ்சமென்றடைந்தேனினிச்சும்மா.

செந்திருநல்லூரில்வாழும் சுந்தரன்குமாரனிதைச்
சொன்னது மாயககருப்பன தானுமே — சிந்து
சொல்லச்சொன்னாள் எந்தனுட தாயுமே ஜெக
ஜோதிமயமாய் ஆதிதனிலே வேதமாகவே ஓதியருளிய
திங்களக்கண்ணம்மையே உன்னை — அநுதினமும்
நம்பினோர்க்கருள்புரி சொன்னேன்.

முளைக்கோட்டு இராகம்.

நானிலம்புகழ் திருநல்லூர் நல்வழம் அருப்புக்கோட்டை—வாழும்
நாயகி உந்தன் பாட்டை இந்த
நாவலர் கொண்டாட்டை இதை
நாயடியேன்கண்டு உன்மேல் பாடினேன் சிறுபாட்டை.

தேனிலம்புகழ் சேதுபதித்துரை சீமைபவரது நாட்டை—எத்
தேசமுங்கொண்டாட்டை வெகு
சீரருப்புக்கோட்டை எங்கும்
சென்று அரசுபுரிந்துவரும் செங்கோலிந்த நாட்டை.

பைபரவம் மெய்யணிந்த பரமனாருளாலே—இந்தப்
பாருலோகையாள சிறு
பாலரெல்லாம் வாழ அந்தப்
பாற்கடலை பின்னேவிட்ட யோக்கியர் செய்தாலே.

மெய்யைவைத்துப் பொய்யைச் செய்த வித்தகாருளாலே —இந்த
மேதினியோர் வாழ அவர்
வேண்டும் மழைபாலே விண்
மாரிபொழிந்து மணிவிளைந்துதோணு மதினாலே.

கங்காள ரூபியுனைக் கண்டடியேன் போற்ற—ஆவல்
கொண்டேனுனை வாழ்த்த இந்தக்
காசினியோரேற்ற உந்தன்
கருணைபுரிந்து அருள்சுரந்து தருணமீதினில் வருவாய்.

சிங்காரமான தோப்பில்சென்று வண்டுகள் கூடி மதுத்
தேனையுண்டு பாடி பரஞ்
சோதியுனைத் தேடி இந்தத்
தேவிமுத்து வாழவந்தாள் பாதந்தனை நாடி.

அங்குமிங்கும் எங்குமாக ஆண்டருளுந்தாயே—உனை
சான்றோர்களுமாய முன்னே
பூண்டவினை மாய எந்தன்
ஆதிபரமேஸ்வரியே ஜோதியுமை நீ வருவாய்.

இன்னும் பிறவியெடுக்கலாமோ எங்கள்முத்துத்தாயே பாதம்
வந்தேன் உந்தன் மாயன் அந்தச்
சுந்தரனுஞ்சேயன் இந்த
இமையோர் பணிந்தேற்றுகின்ற ஈஸ்வரி உன்நாயன்.

பாதிராத்திரிவேளையில்—என்ற மெட்டு.

அண்டரண்டம்புகழ் யெண்டிசையோர்மகிழ்
அம்பிகை வாழவந்தாள்—இந்த
அம்புவி ஆளவந்தாள்—உன்னை
நம்பினோர் வாழவந்தாள்—எந்தன்
ஆதியே ஜோதியே நீதியே எங்குமாக நிறையவந்தாய்.

தொண்டர் இருதயம் கண்டுமகிழ்கின்ற
ஜோதிமணி யணிந்தாய்—அந்தப்
பாதிமதி யணிந்தாய்—இப்போ
நீதிமதி புனைந்தாய்—இந்தப்
பாரினில் பாவலர் ஒதிமகிழ்ந்திட பாக்கியமே யளித்தாய்.

சண்டனைக் காலாலுதைத்தவர் பாகம் வந்
தண்டோர் புகழவைத்தாய்—அதைக்
கண்டோர் மகிழவைத்தாய்—உந்தன்
தொண்டரை வாழவைத்தாய்—இந்தக்
காசினியில் பிரபஞ்சந்தனைவிட்டு கடைத்தேற ஓதவைத்தாய்.

பச்சைமரகத ஓலையணிகின்ற
உச்சித மாமயிலே—ஜெகத்தோர்
மெச்சிடுவார் குயிலே—யகத்தோர்
வைத்திடுவார் ஒயிலே—அந்தப்
பாஸ்கர சேதுபதித்துரை சீமையாள் பாண்டித்துரை மகளே.

காரணி பரிபூரணி யுன்னுட
காரணந்தோணலையோ—வினை
பாரினில்த் தீயலையோ—சூர
பஸ்பனை காயலையோ—அந்தக்
காலனணுகாமல் பாலனை உன்னுட கண்பார்த்து ஆளிலையோ.

செல்வம் பெருகிச் செழித்து வளர்ந்திடும்
கல்விக் களஞ்சியமே—இந்த
நல்லூரில் வாழிடமே—அன்பர்
இல்லிடம் வாழ்தினமே—அந்தச்
சேதுமகராஜன் ஆதியிலே முன்னாள் செய்தவமே சுகமே.

பெற்றவர்க்குப் பிள்ளை எத்தனை
குற்றம் செய்தாலும் பொறுப்பாய்—இன்சொல்
பேசுங்கிளி சிறப்பாய்—அன்பர்
வாசிதனைத் துறப்பாய்—இந்த
பேரும்பெரிய தபோதனர்முன்னிலேமாயன்சொல்லைப்பொறுப்பாய்.

சித்தமிரங்கித் திருநல்லூர் ஊர்தனில்
நித்திய மிருந்தருள்வாய்—உந்தன்
பத்தனைப் பார்த்தருள்வாய்—உமை
சத்தி நிறைந்தருள்வாய்—இப்போ
சின்னஞ்சிறியன் தெரியாமல்சொல்லிடும் வர்ணக்கவி பொறுப்பாய்.

ஆனந்தக் களிப்பு.

சீர்வளருந்திருநகரம் வாழும்—நமது
சிவகாமி வாழவந்தாள் பாதம்நம்மை யாளும்
நேர்வளர அநுதினமும் நாமே—இந்த
நிறைந்த பரிபூரணியைப் போற்றி செய்குவோமே.

சார்பிறவித் துயரதனை நீக்க—அந்தச்
சண்ட நமனுறவு தனை கிட்டவராதாக்க
ஏர்வளரும் அமுதலிங்கர் பாகம்—விட்டு
எந்நாளும் பிரியாத அன்னைமலர் போற்றி.

கார்விளைய மழைபொழிய உம்மை—இந்தக்
காசினி எல்லாம் தழைக்கச் செய்வாளே அம்மை
பார்விளைய மணிபொழிய உம்மை—இந்தப்
பாண்டியர்கள் தேசமெல்லாம் ஆண்டிடுவாள் அம்மை.

சாரும் தபோதனர்கள் பின்னே—அந்தச்
சண்ட நமன் வந்தாலடிப்பாளே யன்னை
என்தான் தெரியவில்லை இன்னும்—நாம்
என்ன வினையதுவும் முன்னே செய்தோமோ.

Q 25:417
N27

சான்றோர்கள் வாழ்வார்கள் திண்ணம்—பின்னால்
சாராதார் தாழ்வார்கள் யாருமறியாரோ
சன்ன செய்திருக்காளே முன்னே—அது
தானுந்தெரியாமலே யிருக்கிறோமே இன்னும்.

தாயார் வயிற்றிலே சிக்கி—அங்கே
தானுங்கிடந்து உழன்றோமேபக்கி
இன்னமும் தோணலே யென்றால்—நமக்
கென்னசெய்தால் தோணும் மேற்கதி நன்றாய்.

இரணியன் என்செய்தான் முன்னாள்—அந்த
எம்பெருமான் பாதம் மறந்ததால்ச் சொன்னேன்
ராவணன் என்செய்தான் பின்னால்—அந்த
நாயகி பாதம் மறந்ததால்ச் சொன்னேன்.

முப்புராதிகள் முன்னால்—அவர்
மூர்க்கக் குணத்தால் அழிந்தார்கள் அந்நாள்
சொல்லியுந்தோணலே யென்றால்—என்ன
தீவினை வந்து இருக்குதோ நன்றாய்.

ஆராய்ந்து பாருங்கள் சொன்னேன்—அதை
ஆராயாவிட்டால் அவளென்ன செய்வாள்
நரகக் குழியிலே முன்னால்—முந்நூறு
நாளுங்கிடந்து உழன்றோமே அந்நாள்.

நல்லூர் அமுதலிங்கர் பாகம்—வந்த
நாயகி பாதமலர் நானடியேன் போற்றி
சொல்லாலும் பொருளாலுமறியா—பரம
ஜோதியுமை வாழவந்தாள் பாதமலர் போற்றி.

திருவுற்றிலகு—என்ற மெட்டு.

ஜெகமெச்சும் திருநல்லூர் யுகமெச்சருப்புக்கோட்டை
செல்வியே அமுதவல்லியே—அன்பர்
கல்வியே சிவன் செல்வியே—இந்த
சிந்துபாடிடும் மைந்தனெந்தனை வந்துகாத்திடலுந்தன் பாரமே
சிகரக்குழலழகிவாரோமே—உந்தன்
புகழைப்பாடுவதெந்தன் பாரமே

22643
சென்னை-600008

கங்கைக்கமழலோடு சங்கம் புகழலோடும்
காட்சியே அன்பர் ஆட்சியே—மாயக்
காட்சியே வெகு பேச்சியே—அதைக்
காட்டிஎந்தனை யாட்டிவைத்திடும்மூட்டும்வல்வினை ஒட்டிவைத்திடும்
கன்னியே உன்னாலன்றியே—எனைக்
காப்பதார் துயர்தீர்ப்பதார்.

திருவுற்றழகுகொண்டு மருவுற்றிலகுகின்ற
செல்வியே பரம வல்லியே—உனைச்
செப்பினேன் மனதொப்பினேன்—இந்த
சேதுபூமியைப் பாதுகாத்திடும் மாதுவுந்தனையேது ஒத்திடும்
சிங்க வாகனத்தங்கமே—பதம்
சேர்ப்பதுவுந்தளங்கமே.

தெள்ளுதமிழுக்குதவும் கல்விமிகப்பலுதும்
சீமையே அன்பர் வாய்மையே—பரஞ்
ஜோதியே அன்பர் நீதியே—பாதம்
கண்டுஉந்தனை நாடிவந்திடும் மாயனெந்தனை யாதரித்திடும்
காட்சியே புரிஆட்சியே—ஞானம்
பாட்சியே பயிர்த்தேர்ச்சியே.

சங்கப்புலவரோடு யெங்கும்புகழுகின்ற
தங்கமே எனதங்கமே—பாதம்
சார்ந்தவர் துயர் தீர்ந்தவர்—அந்த
தாருகாவனச்சூரன் மாய்ந்திட வீரசூரமாய்ப்பாரில் மாய்த்திடும்
சத்தியே சிவசித்தியே—உனைப்
பற்றியே வந்தேன் புத்தியே.

சிங்கம் கரடி யாழி எங்கும் வாகனமாகச்
செல்வியே பங்கம் வெல்வியே—சிவன்
தேவியே எனதாவியே—இந்த
சிறியனுந்தனை மருவிவந்தேனே அருள்புரிந்திடும் தருணம் வந்ததே
அன்புமே புரிதங்கமே—எனை
ஆதரிப்பதுன் பாதமே.

முற்றிற்று.